பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

08 04 2025 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- முத்ரா திட்டத்தின்கீழ், இதுவரை 33 லட்சம் கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- இந்தியா - போர்ச்சுக்கல் இடையிலான நட்புறவு மேலும் வலுவடையும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

- இந்தியா - இஸ்ரேல் இடையே வேளாண்துறை ஒத்துழைப்புக்கான ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாயின.

- தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட பத்து மசோதாக்களுக்கு தங்களது சிறப்பு அதிகாரத்தின் அடிப்படையில் ஒப்புதல் அளிப்பதாக உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

- ஆசிய சாம்பியன் பேட்மிண்டன் போட்டி சீனாவில் இன்று தொடங்கியது.

<u>*--- இனி விரிவான செய்திகள் --*</u>

<<<<<<>>>>>

தொழில் முனைவோர் எளிதில் கடன் பெறுவதற்கான சூழலை உறுதி செய்ய மத்திய அரசு தொடர்ந்து முன்னுரிமை அளிக்கும் என பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

முத்ரா திட்டம் தொடங்கப்பட்டு, பத்தாண்டுகள் நிறைவடைவதையொட்டி, புதுதில்லியில், இன்று பயனாளிகளுடன் கலந்துரையாடிய அவர், இத்திட்டம் எண்ணற்ற மக்கள் தங்களது தொழில் முனைவோர் திறனை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பளித்துள்ளதாக கூறினார்.

முத்ரா திட்டத்தில் பயனடைந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் ஷெட்யூல்டு வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று குறிப்பிட்ட பிரதமர், இவர்களில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் பெண்கள் என்றும் தெரிவித்தார்.

இத்திட்டத்தின்மூலம், எவ்வித உத்தரவாதமும் இன்றி இதுவரை 33 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு கடனுதவி வழங்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

முத்ரா திட்டத்தின்மூலம், லட்சக்கணக்கானோரின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக கூறிய திரு நரேந்திர மோடி, வங்கிக்கடனுதவி பெற்று சிறப்பாக தொழில் நடத்தி, முன்னேற்றம் அடைந்தவர்களுக்கு தமது வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டார்.

முத்ரா திட்டத்தின்கீழ், ஒரு நொடிக்கு ஒன்று புள்ளி ஆறு என்ற அடிப்படையில் கடனுதவி வழங்கப்படுவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இது, இதயத்துடிப்பின் அளவைவிட அதிகம் என்றும் அவர் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கு முத்ரா திட்டம் பேருதவியாக அமைந்துள்ளது என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், முத்ரா திட்டம் சுய வேலைவாய்ப்பு மற்றும் உள்ளூர் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்துள்ளதாக கூறியுள்ளார்.

இத்திட்டம் நாடு முழுவதும் உள்ள சிறு தொழில் முனைவோருக்கு அதிகாரம் அளித்திருப்பதாக குறிப்பிட்டுள்ள அவர், அனைவருக்கும் எளிதில் கடனுதவி கிடைக்கச் செய்ததன்மூலம், லட்சக்கணக்கானோரை தொழில் முனைவோராக மாற்றியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சுயசார்பு இந்தியாவை உருவாக்க முத்ரா திட்டம், உதவிகரமாக அமைந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஒட்டுமொத்த முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி, மற்றும் சமூக நலன் குறித்த பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையை பூர்த்தி செய்யும் வகையில் இத்திட்டம் உள்ளதாகவும் திரு எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

இந்தியா – போர்ச்சுக்கல் இடையிலான நட்புறவு மேலும் வலுவடையும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

லிஸ்பெனில் போர்ச்சுக்கல் அதிபர் திரு **Marcelo Rebelo Desousa** அளித்த விருந்து நிகழ்ச்சியில் பேசிய அவர், இருநாடுகள் இடையே தூதரக உறவுகள் ஏற்பட்டு, 50 ஆண்டுகள் நிறைவடைந்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது என்றார்.

பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

<<<<<<>>>>>

ஒன்றுபட்ட மற்றும் வலிமையான இந்தியாவை உருவாக்குவது என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் கனவு நனவாகி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பு நிலவரம் குறித்து உயரதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், காஷ்மீரை சேர்ந்த மேலும் மூன்று அமைப்புகள் ஹுரியத் இயக்கத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவரை, 11 அமைப்புகள் பிரிவினைவாதத்தை கைவிட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காஷ்மீர் மக்கள் நாட்டின் அரசியல் சாசனம் மீது வைத்துள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக இது உள்ளது என்றும் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான், புதுதில்லியில் இன்று இஸ்ரேல் நாட்டின் வேளாண் மற்றும் உணவு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Avi Dichter** –வுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அப்போது, இந்தியா - இஸ்ரேல் இடையே வேளாண்துறை தொடர்பான பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

மேலும், வேளாண் தொழில் சார்ந்த பல்வேறு அம்சங்கள் குறித்தும் இந்த பேச்சுக்களின்போது ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட பத்து மசோதாக்களுக்கு தங்களது சிறப்பு அதிகாரத்தின் அடிப்படையில் ஒப்புதல் அளிப்பதாக உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல், ஆளுநர் நிறுத்தி வைத்ததை எதிர்த்து, தமிழக அரசு தொடர்ந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் திரு பர்திவாலா, திரு மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த மசோதாக்கள் இரண்டாவது முறையாக நிறைவேற்றி அனுப்பப்பட்ட நாளில் இருந்து அமலுக்கு வருவதாக தீர்ப்பளித்துள்ளது.

இந்த மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஆளுநர் நிறுத்திவைத்தது அரசியல் சாசனத்தின்படி தவறானது என்றும் நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

<<<<<<>>>>>

ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சினைக்கு தீர்வுகாண உறுதிபூண்டுள்ளதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஊட்டச்சத்து இருவார விழா இன்று தொடங்குவதையொட்டி, அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், குழந்தை பிறந்ததில் இருந்து, முதல் ஆயிரம் நாட்களுக்கான கவனிப்பு, ஊட்டச்சத்து திட்டத்தின் பலன்கள் குறித்து மக்களுக்கு எடுத்துரைப்பது, ஊட்டச்சத்து குறைபாட்டை சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை திறம்பட மேற்கொள்ளுதல் மற்றும் குழந்தை பருவ உடல் பருமனை தவிர்க்க ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவித்தல் ஆகிய நான்கு அம்சங்கள் இந்த ஆண்டு பின்பற்றப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

துபாய் பட்டத்து இளவரசர் **Sheikh Hamdan Bin Mohammed** அரசுமுறைப்பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி, விமான நிலையத்தில் அவரை வரவேற்றார்.

துபாய் இளவரசருக்கு முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

<<<<<<>>>>>

காங்கிரஸ் கட்சியின் இரண்டுநாள் செயற்குழு மற்றும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் அகமதாபாதில் இன்று தொடங்கியது.

அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில், காங்கிரஸ் நாடாளுமன்ற குழுத்தலைவர் திருமதி சோனியாகாந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, மற்றும் காங்கிரஸ் ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள், மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

இக்கூட்டத்தில், கட்சியின் வருங்கால செயல் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் ராணுவத்தின் செயல்பாடுகள் குறித்து ராணுவ தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி ஸ்ரீநகரில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

ராணுவத்தின் 15-ஆவது படைப்பிரிவினருடன் நடைபெற்ற இந்த ஆய்வின்போது, எல்லைப்புற பாதுகாப்பு மற்றும் ராணுவத்தின் ஆயத்த நிலை குறித்தும் ஜெனரல் உபேந்திர துவிவேதி கேட்டறிந்தார்.

ராணுவ துணை தளபதி லெப்டினன்ட் ஜெனரல் வீரேந்திர வட்ஸ் உள்ளிட்ட உயரதிகாரிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

மும்பை தாக்குதல் வழக்கில் தொடர்புடைய தஹவூர் ராணா தம்மை இந்தியாவுக்கு நாடு கடத்துவதற்கு தடை விதிக்கக்கோரி தாக்கல் செய்த மனுவை அமெரிக்க உச்சநீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

தற்போது அமெரிக்காவின் லாஸ்ஏஞ்சல்ஸ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தானியரான தஹவூர் ராணா, இந்தியா – அமெரிக்கா இடையிலான உடன்படிக்கையின் அடிப்படையில், நாடு கடத்தப்படுவார் என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப், கடந்த பிப்ரவரி மாதம் தம்மை சந்தித்த பிரதமர் திரு நரேந்திர மோடியிடம் தெரிவித்திருந்தார்.

<<<<<<>>>>>

கர்நாடகாவில் கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற போலி தங்க நகைக்கடன் மோசடி தொடர்பாக பெங்களூரு ஷிவமொக்கா உள்ளிட்ட இடங்களில் அமலாக்கத்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டுள்ளனர்.

ஷிவமொக்கா மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் போலி தங்க நகைகளின் பெயரில் 62 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்கியது குறித்த புகாரின் பெயரில் எட்டுக்கும் மேற்பட்ட இடங்களில் சோதனை நடைபெறுவதாக அமலாக்கத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

<<<<<<>>>>>

ஆசிய சாம்பியன் பேட்மிண்டன் போட்டி சீனாவில் இன்று தொடங்கியது.

இதில், இந்தியாவின் சார்பில் லக்ஷயா சென், பிரணாய், கிரண் ஜார்ஜ், பிரியன்ஷூ ரஜாவத் ஆடவர் பிரிவிலும், பி வி சிந்து, அனுபமா உபாத்யாயா, மால்விகா பன்சோட், ஆகாஷி காஷியப் மகளிர் பிரிவிலும், பங்கேற்றுள்ளனர்.

<<<<<<>>>>>

பாரிஸ் கிராண்ட்ஸ்லாம் செஸ் போட்டியில் ஆறாவது சுற்றில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி வெற்றிபெற்றார்.

ஜெர்மனியின் **Vincent Keymer**-ஐ வென்ற அவர் மூன்றரை புள்ளிகள் பெற்றுள்ளார்.

<<<<<<>>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணி இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் நடைபெறும் இப்போட்டி பிற்பகல் மணி 3.30-க்கு தொடங்குகிறது.

இரவு மணி 7.30-க்கு பஞ்சாபில் நடைபெறும் மற்றொரு போட்டியில், சென்னை அணி, பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<>>>>>